சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 05.02.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **62/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | **அ.சா-2** |
| சாட்சியின் பெயர் | : | சஞ்சய் |
| தந்தை பெயர் | : | சம்பத் |
| கிராமம் | : | விடையல் கருப்பூர் |
| தாலுக்கா | : | வலங்கைமான் |
| தொழில் | : | சென்ட்ரிங் வேலை |
| வயது | : | 18 |

2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 05 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ஆர்.வீரபாண்டியன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 முதல் 5 எதிரிகள் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

நான் சென்ட்ரிங் வேலை பார்க்கிறேன். அ.சா.1 அபிகண்ணன் டிரைவராக பணிபுரிகிறார். குடவாசலுக்கு அ.சா.1 அபிக்கண்ணனாகிய எனது அண்ணனுடன் சென்றேன். அ.சா.1 அபிக்கண்ணனும், நானும் வேலைக்கு போய்விட்டு வந்தோம். என்ன வேலைக்கு சென்று வந்தோம் என்றால் வண்டிக்கு போயிட்டு வந்தோம். நானும், எனது அ.சா.1 அபிக்கண்ணனான அண்ணனும் இரு சக்கர வாகனத்தில் வந்தோம் என்றால், அந்த வாகனம் அப்பாச்சி வாகனம். போலீசார் விசாரணையில்

அப்பாச்சி வாகனத்தில் வந்தோம் என சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் குடவாசலிலிருந்து வரும்போது இரவு 01.00, 01.15 இருக்கும் என்றால் சரிதான். 01.01.2025 ம் தேதி என்றால் சரிதான். நாங்கள் வரும்போது, ரோட்டில் கூட்டமாக இருந்தது என்றால் சரிதான். 20, 30 பேர் இருப்பார்களா என்றால் இருப்பார்கள். 01.01.2025 ம் தேதியன்று போலீசார் என்னை விசாரித்தார்கள். அதன்பிறகு 02.01.2025 ம் தேதியன்றும் போலீசார் விசாரித்தார்கள். கும்பகோணம் அரசு தலைமை மருத்துவமனையில் என்னை போலீசார் விசாரித்தார்கள். பின்னர் 03.01.2025 ம் தேதியன்று போலீசார் என்னை விசாரித்தார்கள். எனக்கும் தலையில் காயம் பட்டு இரத்தம் வந்தது. சட்டையிலும் இரத்தம் ஆகிவிட்டது. அந்த சட்டையுடன்தான் நான் பெரிய ஆஸ்பத்திரிக்கு போனேன் என்றால் சரிதான். அந்த இரத்தம்பட்ட சட்டைகளை போலீசார் வாங்கிக் கொண்டார்களா என்றால் வாங்கிக்கொண்டார்கள். போலீசார் என்னிடமும் புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். அதில் நான் கையொப்பம் செய்து கொடுத்தேன். என்னை ஆஸ்பத்திரியில் யார் சேர்த்தார்கள் என்றால், நான் மயக்கப்பட்டு இருந்ததால் என்னை சேர்த்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. நான் மருத்துவமனையில் எத்தனை மணிக்கு சேர்ந்தேன் என்ற விபரமும் எனக்கு தெரியாது. எனக்கு எந்தவித காயமும் படவில்லை என்றாலும், அ.சா.1 அபிக்கண்ணன் எனது பெரியப்பா மகன் என்பதாலும், அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல. நானும், அ.சா.1 அபிக்கண்ணனும், இரு சக்கர வாகனத்தில் போகும்போது காயம் பட்டது என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.02.05 17:50:11 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம்,
திருவாரூர்.